கலாசார மறுமலர்ச்சியும் பேராண்மையும்

ஆக்கியோன் உரை

கலாச்சார சீரழிவுகளை அகற்ற புத்தி ஜீவிகளால் எடுக்கப்பட்ட அனேக நன்முயற்சிகளின் பலனாக உரைக்கப்பட்ட பற்பல புத்திமதிகள், நீதிக்கதைகள் போன்றவை இன்றைய இளம் சமுதாயத்தினரிடம் நல்மாற்றம் எதனையும் கொண்டுவர முடியவில்லை என்பது வருந்தத்தக்கதே. காரணம் தொழில் நுட்ப விஞ்ஞான வெற்றிகளின் வெளிப்பாடுகளான கைத்தொலைபேசி, எஸ்.எம்.எஸ் தொடர்பாடல், இன்ரநெற் போன்றவற்றின் கவர்ச்சி, சமுதாயக் கட்டுப்பாடுகளை நொடிப்பொழுதில் உடைத் தெறியும் அவற்றின் உயர் வலிமையின் முன் இதுவரை கூறப்பட்ட, நற்புத்திமதிகள், நல்லுபதேசங்கள், படுதோல்வி அடைந்து விட்டன என்பதே அனுபவ உண்மையாகும். விஞ்ஞான வெளிப்பாடுகள் அனைத்தினதும் உயர்கவர்ச்சி, உயர்வலிமை அனைத்தையும் வென்று இளம் சமுதாயத்தின் அறியாமையை நீக்கி அறிவுக் கண்ணைத் திறக்க ஓரேயொரு வழி மாத்திரமே உள்ளது. நல்லொழுக்கத்தின் அடிப்படையாக பரம இரகசியமாகவுள்ள "பசுதர்மம்" என்று அழைக்கப்படும் காமம் பற்றிய மிகச் சரியான விளக்கமாகிய இச்சிறுநூலை வாசித்து, உணர்ந்து கடைப்பிடித்தல் என்னும் எதையும் வெற்றி கொள்ளும் பிரமாஸ்திரத்தைப் பெறுவதன் மூலம் மானிடத்தின் உயர் கலாச்சாரத்தை பூமி முழுவதும் படைக்க இன, மத, மொழி வேறுபாடின்றி ஒற்றுமையுடன் அனைத்துலக மக்களும் ஒன்று சேர்ந்து முயற்சிப்போமாக.

கட்டுரை ஆசிரியர் தர்மலிங்கம் சபாலிங்கம்
சித்தங்கேணி, ஸ்ரீலங்கா.

வெளியீடு
19.11.2010

“ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்”

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனென்றோ ஆன்ற ஒழுக்கு”

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு”

“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்”

கலாசார மறுமலர்ச்சியும் பேராண்மையும்

ஒருத்தனுக்கு ஒருத்தி

கலாசார மறுமலர்ச்சியின் உச்சம் ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் வாழ்க்கை முறையாம். எம் முன்னோர்களால் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வந்த பொன்னான வாழ்க்கை முறையாகும். இயற்கை அன்னையால் ஆசீர்வதிக்கப்பட்ட இவ்வாழ்க்கை முறை முற்காலத்தில் பெரும்பகுதி மக்களால் கடைப்பிடித்து ஒழுகப்பட்டு வந்துள்ளது. அக்காலங்களில் இயற்கை அன்னை சீறிச் சினந்து கொதித்து எழுந்து பேரழிவை மக்களுக்கு தரவில்லை. சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, டெங்கு, பன்றிக்காய்ச்சல், பறவைக்காய்ச்சல் என தொற்றுநோய்களால் மக்கள் அவதிப்படவில்லை. இயற்கை அமைதியாக சாந்தமாக இருந்தது. மாரியில் மழை பொய்க்கவில்லை. பசி, பஞ்சம், பட்டினி எங்கும் காணப்படவில்லை. வாழ்க்கைக்குரிய வளங்களால் பூமி நிறைந்திருந்தது. பூமியில் மனித வாழ்க்கை தேனாய் இனித்தது.

இயற்கை அது கோடானகோடி அண்டகோளங்களை உருவாக்கி வான வீதியில் இயக்குகிறது. மரம், செடி, கொடிகளாய் நீர் வாழ்வனவாய், பறவைகளாய், நாலுகால் மிருகங்களாய் கற்பனைக்கெட்டாமல் விரிந்து பரந்துள்ளது. இவை எல்லாவற்றுள்ளும் மனித உடம்பே இயற்கையின் உச்ச வெளிப்பாடாக திகழ்கிறது. ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் மனித வாழ்க்கை இயற்கையோடு மிகவும் ஒத்துப்போகும் ஒரு வாழ்வியல் முறையாக இருந்ததால் இயற்கை அன்னை மிகவும் மனம் மகிழ்ந்திருந்தாள். ஆறுகளில் நீர் கரைபுரண்டோட விளைச்சல்கள் பெருக யானை கட்டிப் போரடிக்க சகல வளங்களாலும் நாடு நிரம்பியிருந்தது. பூமியில் மனித வாழ்க்கை மிகவும் சாந்தமாக அமைதியாக தர்மத்துடன் பூலோக சுவர்க்கம் போல் திகழ்ந்தது.

முன்பிருந்த பெரியோர்கள் கடின உழைப்பை தியாகம் தன்னலமறுப்பு எனும் துறவினூடே செலுத்தி வாழ்வின் இரகசியங்களை மர்மங்களை அறிந்துணர்ந்திருந்தனர். வாழ்வின் நோக்கம் பேரின்ப அனுபவம் என்பதே அப்பெரியார்கள் அனைவரதும்

முடிந்த முடிபாகத் திகழ்ந்தது. இவ்வுண்மைகளை பாடல்களாகவும், நூல்களாகவும், குறள்களாகவும் இலக்கியங்களாகவும் ஆக்கி எமக்குத் தந்துள்ளனர். வாழ்வின் உள்ளும் புறமும் சென்று இன்பத்தை அறுவடை செய்ய வாழ்க்கையின் அத்திவாரங்களாக அமைக்கப்பட வேண்டியது ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் வாழ்க்கை முறை என்பதே அப்பெரியார் யாவரும் எமக்கு காட்டிய முக்கிய ஒரேயொரு வழியாகும். கட்டுக்கோப்புடன் உறுதியாக இருந்த இம்முறை கடினமானதாகத் தோன்றினும் வாழ்வின் வெற்றிக்கான ஒரேயொரு வழியாகும். இதை இன்றளவும் சிலர் பாதுகாத்து வருகின்றனர்.

இம்முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்த அக்காலத்தில் கணிசமான ஆண்கள் பேராண்மை படைத்தோராகவும் பெரும்பாலான ஆண்கள் ஆண்மை படைத்தோராகவும் பெருமளவு பெண்கள் நல்லொழுக்கத் துடன் கூடி கற்பு நெறியில் நிற்பவர்களாகவும் இருந்தனர். சிறு தொகையினரான ஆண்களே ஆண்மைக் குறைவானவர்களாகவும் பத்து இலட்சத்துக்கு ஒருவனே அலி ஆடவனாகவும் காணப்பட்டனர்.

இன்றைய கம்பியூட்டர் யுகத்தின் வாழ்வியல் முறை

இப்பொழுது கம்பியூட்டர் யுகம் வந்துள்ளது. விஞ்ஞானம் பெருமையுடன் பற்பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. இதனால் சினிமா படங்கள் பெருகிவிட்டன. மெகா தொடர் நாடகங்கள் பற்பல வருடங்களாக வஞ்சகம், பழிதீர்த்தல், தீய ஒழுக்கங்கள் எனத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. SMS தொடர்பாடல்கள் இளைஞர்களினதும் மாணவர்களினதும் பலமணி நேரங்களை தினமும் களவாடுகின்றது. இணையத்தள வசதி கொண்ட கைத் தொலைபேசிகள் நாடெங்கும் நிரம்பி வழிகின்றன. இன்ரநெற் கம்பியூட்டர்கள் ஒரு நொடியில் உலகின் நல்லது கெட்டது அனைத்தையும் வீட்டுக்குள் கொண்டுவந்து சேர்க்கின்றன. மேலும் ஆபாசப் படங்களை எவரும் பார்க்க முடியும் என்ற நிலை தோன்றியுள்ளது. இவை மிகவும் கவலைக்குரிய விடயங்களாகும். இவைகள் ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் சனாதன தர்மத்தை இடிமேல் இடியாகத் தாக்கி அழிக்கத் தொடங்கிவிட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் இருந்த பாதுகாப்புத் தடைகளை தகர்த்தெறியத் தொடங்கிவிட்டன.

ஆபாசப் படங்கள் சுலபமாக இணையத்தள வசதி கொண்ட கைத்தொலைபேசிகள் ஊடாக மாணவ மாணவிகளை வந்தடைகின்றன. இளம் கன்று பயமறியாது என்பதற்கிணங்க காண்பவற்றை நடைமுறையில் கொண்டுவர இவர்கள் முனையவே செய்வர். பற்பல பாலியல் வக்கிர நடவடிக்கைகள் நாட்டில் பெருகத் தொடங்கியுள்ளன. இளவயது விவாகரத்துக்கள், அநாதரவான குழந்தைகள், பாலியல் வன்முறைகள் என முன் ஒருபோதும் இல்லாத கலாசார சீரழிவுகள் சமூகத்தை வலம்வரத் தொடங்கியுள்ளன. ஆயினும் பெரும்பாலான பெற்றோர்கள் உறங்கு நிலையிலேயே காணப்படுகின்றனர்.

எனவே சமூகத்தில் நிலவும் கொடுமையான வக்கிர, காம வெளிப்பாடுகளை எப்பாடுபட்டேனும் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும். மனிதனின் மிருக உணர்ச்சி வெளிப்பாடு காமமாகும். இக்காமம் பற்றி வெளிப்படையாகக் கதைப்பது மனிதனுக்கு சங்கடமானதொரு விடயமாகும். இதனால் பல பெற்றோர்கள் கலாசார சீரழிவை பற்றி விளக்கமாக கதைக்க முடியாதுள்ளனர். ஆபத்துக்குப் பாவமில்லை என்பர் பெரியோர். அவ்விதியை இங்கு கொண்டு இன்றைய காலகட்டத்தில் காமம் பற்றி விளக்கமாகச் இளம் சந்ததியினருக்கு சொல்ல வேண்டிய அவசரமானதொரு நிலை தோன்றியுள்ளது.

முற்காலக் குருகுலக் கல்வியின் உயர் வாழ்வியல் முறை

சகல நற்குணங்களையும் கடமைகளையும் சந்தேகமறக் கற்று அதன்படி ஒழுகினால் நல்லொழுக்கம் பெறப்படும். உண்மையில் நல்லொழுக்கம் என்பதின் சாரம் காம செயற்பாடுகளை மிகச் சரியாக நடத்துவதேயாம். மறுதலையாக நேரடியாகவே காமச் செயற்பாட்டை மிகச் சரியாக செய்வது எப்படி என்பதைக் கற்றுக்கொண்டு அதன்படி ஒழுகினால் நல்லொழுக்கமும் சகல நற்குணங்களும் உண்டாகும். கல்வி என்பது சகல நற்குணங்களையும் சகல வாழ்வியல் கடமைகளையும் ஆராய்ந்து அறிவதும் அதன்படி ஒழுகுவதும் ஆகும். இதுவே வாழ்வியல் கல்வியாகும். இதனால் வாழ்வில் சகல நன்மைகளையும் அடைந்து துன்பமற்று வாழ்வதற்கு கல்வி என்று பொதுவாக கூறப்படும் வாழ்வியல் கல்வி முக்கியமானதாகும்.

முன்பு குருகுலக் கல்விமுறை இருந்தது. ஏழு வயதில் குருவிடம் மாணவன் ஒப்புவிக்கப்படுவான். சகல கலைகளும் கல்வியும் பூரணமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. நெருப்பைப் போல் பரிசுத்தமாக ஒழுக்கத்தில் இருக்கும் குரு உதாரண புருஷராகிறார். மாணவனும் பணிவுடன் கல்வி கற்று அக்கினியைப் போன்று பரிசுத்தமான ஒழுக்கத்துடன் திகழ்கின்றான். பதினெட்டு வயதளவில் கல்வியை முடித்து வாலிபனாக வீடு திரும்புகிறான். அடுத்ததாக அவன் இல்லற வாழ்க்கைக்குச் செல்ல வேண்டியவனாகின்றான். இந்நிலையில் அவன் காதல் வயப்படக் கூடும். இக்காதல் தெய்வீகக் காதலாக மிளிர்ந்ததால் திருமணத்தில் முடிவுற்று வாழ்க்கை இன்பமயமாக அமைந்தது.

இக்காலக் காதல் என்பது பெருமளவான சந்தர்ப்பங்களில் அநீதிகளுக்கும் துன்பங்களுக்கும் கலாசார சீரழிவுகளுக்குமான ஆரம்பமாகவே இருப்பதை நாம் பார்த்து வேதனைப்படக்கூடியதாகவே இருக்கின்றது.

முற்கால காதல், காமம் என்பவற்றுக்கும் இக்கால காதல், காமம் என்பவற்றுக்கும் இடையில் மலையளவு வித்தியாசம் உள்ளது. முற்காலத்தில் மிக உயர்ந்த ஒழுக்க நெறியின் ஊடாக காதல் காமம் என்பன வெளிப்படுத்தப்பட்டன. இக்காலத்தில் உள்ள காதல் காமம் என்பவை மிகவும் கீழ்நிலையின் ஊடாக அதர்மமான வழிகளில் வெளிப்படுத்தப் படுகின்றன. இதனால் முற்கால காதல் திருமணங்கள் வெற்றியிலும் மகிழ்ச்சியிலும் முடிவடைந்திருந்தன. இக்கால காதல் திருமணங்கள் வெறுப்பு, விரக்தி, துன்பம், பிரிவு, தற்கொலை, மரணம் என பெரும்பாலானவை தோல்வியில் முடிவடைகின்றன.

இனி முற்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட தர்மத்தோடு கூடிய உயர்வான நிலையில் இருந்த காதல், காமம் என்பவற்றை இப்பொழுது பார்ப்போம். உண்மையில் காமம் தன்னளவில் தீயதல்ல. மனிதனிடம் அமைந்திருக்கும் இக்காமம் தெய்வ சக்தியே ஆகும். இதைச் சரியாகப் பயன்படுத்தினால் பூமியில் அடைய முடியாதது ஏதுமில்லை.

தெய்வீகக் காதல்

நிற்க, தெய்வம் என்பதற்கு வரைவிலக்கணமாகப் பெரியோர்கள் முடிந்த முடிவாக கூறுவது கற்பனைக்கு எட்டாத முடிவற்ற பிரமாண்டமான பேரின்ப ரச உணர்வு அனுபவமே தெய்வ சக்தியாகும். இத்தெய்வ சக்தியின் அம்சமாக காமம் மனிதனிடத்தில் அமைந்திருக்கின்றது. இதைக் கீதையில் பகவான் கிருஷ்ணர் நான் மனிதனிடத்தில் தர்மத்துக்கு மாறுபடாத காமமாக உறைகிறேன் எனக் கூறியுள்ளார். எனவே தெய்வ சக்தியாகிய காமம் தர்மத்துடன் கூடிய வழிகளில் பாதுகாக்கப்பட்டு உரிய இடத்தில் உரிய சந்தர்ப்பத்தில் பிரயோகிக்கப்பட வேண்டும். அப்படியில்லாமல் அதர்ம வழிகளில் அதர்மத்துடன் கூடி காமச் செயற்பாடுளில் ஈடுபட்டால் உலகத்தின் தீமைகள் அனைத்தும் ஒன்றுதிரண்டு நம் தலையில் இறங்குவதை நிச்சயமாகவே அனுபவத்தில் காணலாம்.

மேலும் தெய்வாம்சமாகிய காமம் கௌரவமான உயர் நெறியில் வைக்கப்படாமல் கீழ் நிலைக்கு இறக்கப்பட்டு கேவலப் படுத்தப்பட்டமையே இன்று சமூதாயமும் உலகமும் படும் துன்ப நிலைக்கு முக்கிய உண்மைக் காரணமாகும்.

அவதார புருஷரான இராமன் மிதிலையில் ஜனகமகாராஜனின் அரண்மனைக்குப் போகும்போது சீதையைக் கண்டான். இச்செயலை "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்று கம்பர் கூறுகின்றார். இதில் இராமன் சீதையை விரும்புவது தெரிவிக்கப்படுகிறது. அன்று இரவு சீதையைப் பிரிந்து விரகதாபத்தால் இராமன் துன்புற்றான். இதை "காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்" என இராமனின் காமத்தைப் பற்றி திருவள்ளுவரின் கற்பியல் குறள் மூலம் அறியமுடிகிறது.

காதலுக்கு அடிப்படையாய் இருப்பது காமம். காமம் தெய்வாம்சம் என்பதால் இதைத் தெய்வீகக் காதல் என்று அக்காலத்திய புலவர்கள் ஏற்றிப் போற்றிப் பாடியுள்ளனர். ஆகவே காமத்தை தர்ம வழியில் தர்மத்தோடு கூடிய காமமாகச் செயற்படுத்துவது எங்ஙனம்? அதற்குரிய செயற்திட்டங்கள் என்ன? தர்மத்தோடு கூடிய காதலை எவ்வாறு அடையலாம்? எனப் பற்பல கேள்விகள் இங்கு எழுகின்றன.

பெண்களுக்கான வாழ்வியல்

ஆண்களும் பெண்களும் மிகவும் வித்தியாசமான உடல் அமைப்பு, மன அமைப்பு, வாழ்வியல் முறைகளை கொண்டவர்கள். வாழ்வியல் செயற்பாடுகளில் இரு பகுதியினரும் இரு வித்தியாசமான வழிகளில் பயணித்துச் செல்ல வேண்டியவர்கள் ஆவர். பெண்கள் பருவமடைந்து வளர்ந்து திருமணம் ஆகி ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து ஆளாக்க வேண்டிய உடல் அமைப்பை உடையவர்கள். இவர்கள் சந்திர ஆதிக்கத்தின் தன்மை கொண்டவர்களாவர். வீட்டை அலங்கரிப்பது ஆபரணங்களால் தங்களை அழகுபடுத்துவது, உடைகளால் தங்கள் அழகைக் மெருகூட்டுவது, வாய்க்கு ருசியாகச் சமையல் செய்வது எனப் பல நுணுக்கமான கலை அம்சங்கள் கொண்டவர்கள். இவர்கள் திருமணம் செய்து குழந்தைகள் பெற்று அக்குழந்தைகளுக்கு நற்பழக்கவழக்கங்களைக் கற்பித்து அவர்கள் வாலிப வயதாகும் வரை முக்கிய வழிகாட்டியாக திகழ வேண்டியவர்கள். மேலும் நற்குணங்களுடன் கூடி கற்பு நெறியில் நின்று கணவனுக்கும் குழந்தைகளுக்குமான வீட்டுக் கடமைகளை சோர்வற்று ஆற்றுவதே இவர்களது முக்கிய கடமையாகும்.

ஆண்களுக்கான வாழ்வியல்

ஆண்களுக்கு ஏழு வயதில் வாழ்வியலுக்கான கல்வி ஆரம்பமாக வேண்டும். நற்குண நல்லியல்புகள் போதிக்கப்படல் வேண்டும். இவர்களுக்கு பெற்றோர்கள் முன்னுதாரணமாகத் திகழ்தல் அத்தியாவசியமாகும். சிறுவர்கள் பத்து பன்னிரண்டு வயதிலிருந்து ஆரம்பமாகி திருமணமாகும் வரை உள்ள காலம் பிரமச்சாரிய காலம் எனப்படும். ஆண்கள் இக்காலத்தில் பிரமச்சாரிய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும். இப்பிரமச்சாரிய விரதம் பற்றியும் இதனால் ஏற்படும் அளப்பரிய நன்மைகள் பற்றியும் இதனைக் கடைப்பிடிக்காமையால் வரும் பெரும் தீமைகள் பற்றியும் இவ்வயதில் போதிக்கப்படல் வேண்டும்.

முக்கியமாக தர்மத்தோடு கூடிய காமத்துக்கு இந்த வயதில் விந்து ரட்சணை மிகவும் முக்கியமாகும். அதாவது 'சிறுவர்கள் தெரிந்தும் தெரியாமலும் அறியாமையால் சுய இன்பம் காண்பதன் மூலம் விந்தை வீணாக விரையம் செய்து விடுகிறார்கள். இவ்வாறு விந்தை விரையம் செய்யாமல் பூரணமாகத் தடுத்து நிறுத்தி சேமிப்பதை விந்து ரட்சணை எனப் பெரியோர் கூறியுள்ளனர்.

இவ்விந்து வீணாக ஒழுகிப்போனால் தீமை ஏற்படும் என்பதைக் குறிக்க "விந்து விட்டான் நொந்து கெட்டான்" என்ற பழமொழியை இங்கு நாம் நினைவுகூரல் வேண்டும். எனவே பத்து பன்னிரண்டு வயதிலிருந்து திருமண காலம் வரை பிரமச்சாரிய விரதம் எனப்படும் விந்து செலவழிப்பதை முற்றாகத் தடுத்து விந்தைப் பூரணமாகச் சேகரிக்கும் முறையை உறுதியாகக் கடைப்பிடிக்க இளைஞர்களுக்கு போதித்தல் வேண்டும். இதனால் ஏற்படும் நன்மைக்கு அளவே இல்லை. தெய்வாம்சமான காமத்தின் செயற்பாட்டிற்கான சக்தியாக விளங்கும் இந்த விந்து சக்தியை பன்னிரண்டு வருடங்கள் கிட்டத்தட்ட பூரணமாகக் காப்பதால் அவரவர் வணங்குகின்ற கடவுளின் சக்தியில் கால்பங்களவு வல்லமையை இவ்வாழ்விலேயே பெற்றுக்கொள்ள முடியும். பூரணமாக இவ்விரதத்தைக் கடைப்பிடிக்க முடியாவிடில் எவ்வளவுக்கு எம்மால் முடியுமோ முயன்று அவ்வளவிற்கு இவ்விரதத்தைக் காத்து வருதல் வேண்டும். உதாரணமாக முன்று கிழமை இவ்விரதத்தைக் கடைப்பிடித்தாலே சுலபமாக இதன் நற்பலன்களை அனுபவத்தில் காண முடியும்.

பிரமச்சாரிய விரதம்

பிரமச்சாரிய விரதத்தை பன்னிரண்டு வருட காலம் கடைப்பிடித்து வந்தால் பிரமச்சாரிய விரத சித்தி உண்டாகிறது. அதன் பலன்களாவன; அவமாக மரணம் சம்பவிக்காது, திடீர் விபத்துக்கள், கொடிய நோய்கள், மற்றவர்களிடம் விரோதங்கள், வெறுப்புக்கள் ஏற்படவே ஏற்படாது. வாழ்க்கை வெற்றிபெறும். பொருள் வளமும் அருள் வளமும் உண்டாகும். குரலானது மிக இனிமையாக குழந்தைகளின் குரல் போல் இருக்கும். முகத்தில் பிரம்ம தேஜஸ் எனும் ஒளி எப்பொழுதும் வீசிப் பிரகாசமாக இருக்கும். கண்கள் காந்தம்போல் கவர்ச்சியாகப் பளிச்சிடும். மனதில் இரக்கமும் அன்பும் உறுதியும் காணப்படும். தீயதை வெறுத்து ஒதுக்கும் தன்மை எப்பொழுதும் இருக்கும். என்றும் இளமையாக இருப்பர். நோய் எதிர்ப்பு சக்தியால் உடம்பு நிரம்பி வழியும். ஒப்பற்ற அறிவும் எதையும் இலகுவாகப் புரிந்துகொள்ளுதலும் வாக்கு வன்மையும் ஜன வசியமும் உண்டாகும். அதிகம் ஏன் சொல்லுவான். பிரமச்சாரிய விரதத்தில் சித்திபெற்றவன் அல்லது பெருமளவு இவ்விரதத்தைக் கடைப்பிடித்தவனது வாழ்க்கை தேவலோக வாசி ஒருவன் பூவுலகில் வந்து வாழ்வது போலிருக்கும்.

விவேகானந்தர் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தன் ஆன்மீகப் பிரசங்கங்களில் வெற்றிபெற்று பெரும் உலகப் புகழை அடைந்து இந்தியர்கள் எல்லோராலும் அவர் பெருமைப் படுத்தப்பட்டார். அவர் தனது வெற்றிக்கான இரகசியம் என்னவெனில் தனது மனதில் ஒரு தடவை கூட காம எண்ணங்கள் எழாமல் பார்த்துக்கொண்டதே என்று கூறியுள்ளார். அண்ணல் காந்தியும் தனது "சத்திய சோதனை"யில் முப்பத்திரண்டாவது வயதில் முயற்சிசெய்யத் தொடங்கி முப்பத்தாறாவது வயதிலிருந்து தன் மனைவியின் அனுமதியுடன் பூரண பிரமச்சாரிய விரதத்தை தன் வாழ்க்கைக் காலம் முழுவதும் கடைப்பிடித்து வந்துள்ளார். வலிமை பொருந்திய மாபெரும் சாம்ராஜ்யமாகிய இங்கிலாந்தை வெளியேற்றி இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுக்கொடுக்க இவ்விரதமே மூல காரணம் என விளக்கியுள்ளார். இவ்வரிய பிரமச்சாரிய விரதத்தில் முன்றில் ஒரு பங்கு கடைப்பிடித்தாலே அவன் ஒரு ஆண்மை படைத்த ஆடவன் ஆகின்றான்.

தற்கால வாழ்வியல் செயற்பாடுகளின் வெளிப்பாடுகள்

தண்ணீர் குழாயைத் திருப்பி தண்ணீரைத் திறந்து விடுவது போல பல இளைஞர்கள் சுய புணர்ச்சியின் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ விந்தை பெருமளவு வீணடிக்கிறார்கள். சுய புணர்ச்சியின்போது கற்பனையாக விருப்பமான யாரோ ஒரு பெண்ணுடன் உறவுகொள்வதாக எண்ணிக்கொண்டு விந்தை விரையம் செய்கிறார்கள். ஒருத்தனுக்கு ஒருத்தி என்பது இயற்கையின் தர்மம் ஆதலால் இச்சுய புணர்ச்சியானது தர்மத்துக்கு மாறுபட்ட அதர்மமான காமச் செயற்பாடாகிறது. மேலும் சுய புணர்ச்சி மூலம் தமது சக்திகளை பெருமளவு இழப்பவர்கள் படிப்படியாக ஆண்மைக் குறைவு நிலையை அடைகிறார்கள். இது மனப் பலவீனம், உடல் பலவீனம், பதட்டம், கை நடுக்கம், பரீட்சையில் தோல்வி என இப்பட்டியல் தொடர்கிறது. இனி இவர்கள் இல்லறத்தில் திருமணம் செய்து மனைவியுடன் குடும்பமாக வாழும் காலையில் மனைவியைப் பூரணமாக திருப்திப்படுத்த முடியாத பரிதாப நிலைக்குள்ளாகிறார்கள். இவர்கள் தங்கள் தொழிலிலும் வாழ்க்கையிலும் தோல்வியடை கின்றனர். இது ஆண்மைக் குறைவானவர்களுடைய கவலைக்குரிய நிலவரமாகும். ஆண்மைக் குறைவை நீக்க மருந்து மாத்திரைகள் லேகியங்கள் தற்காலிக நிவாரணமேயன்றி நிரந்தர பயன்கள் எதையும் தரப்போவதில்லை. ஆண்மைக் குறைவைத் தீர்க்க எந்த வயதானாலும் பிரமச்சாரிய விரதமெனும் பிந்து இரட்சணையை அதாவது விந்து சக்தியை செலவழிக்காமல் சேமிப்பதை ஆரம்பிக்க

வேண்டும். இதை இயன்றவரை கடைப்பிடித்துவர ஆண்மைக் குறைவு நீங்குவதை அனுபவரீதியாகக் காணலாம்.

பேராண்மை!!!

பிரமச்சாரிய விரதத்தில் மூன்றிலொரு பங்குக்கு மேல் சித்தியெய்தியவர் ஆண்மையுள்ள ஆடவனாகின்றான். இவன் திருமணம் செய்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு இரண்டு மூன்று வருடங்கள் செல்ல மிதமாக குடும்பச் சேர்க்கையில் ஈடுபட்டுவர மனதில் சலனம் படிப்படியாக நீங்கி மன உறுதி ஏற்படும். இல்லறத்தில் மனைவியுடன் வாழும் அனுபவம் கிட்டுவதால் பிற மாதர்களைக் காணும்போது சில வேளைகளில் மனத் தடுமாற்றம் ஏற்படக் கூடும். அந்நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தி ஒருத்தனுக்கு ஒருத்தி என்று வாழும் சங்கற்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு பிற பெண்களை விரும்பாத நிலையை அடைந்ததும் அவன் பேராண்மை பெற்ற ஆடவன் எனப்படுவான். வாழ்க்கை முழுவதும் ஒரு பெண்ணுடன் மட்டும் வாழும் மன உறுதியைப் பெற்ற ஆடவனே பேராண்மை படைத்தவன் ஆவான். உடல் பலம் மாத்திரம் அதிகம் உடையவன் பேராண்மை படைத்தவன் எனக் கொள்ளப்படதக்கவன் ஆகான். வள்ளுவரும் பேராண்மை பற்றிக் குறிக்கையில் "பிறன்மனை நோக்கா பேராண்மை" எனக் குறிப்பிடுகின்றார். ஆனால் பிரமச்சாரிய விரதத்தில் பெருமளவு சித்தி எய்தியவன் இயல்பாகவே பேராண்மை படைத்தவனாகவே இருப்பான்.

ஆடவர்களின் ஆண்மையைப் பற்றிப் பெரியோர்கள் நான்கு வகையாகப் வகைப்படுத்தி உள்ளனர். முதலாவது உயர் வகையில் பேராண்மை படைத்த ஆடவர்கள் இருக்கின்றனர். இவர்கள் அறுபதிலிருந்து தொண்ணூறு வரையிலான புள்ளிகள் பெறுகிறார்கள். அடுத்து ஆண்மையுள்ள ஆடவர்கள் இவர்கள் முப்பத்திலிருந்து அறுபது வரையான புள்ளிகள் பெறுகிறார்கள். மூன்றாவதாக ஆண்மைக் குறைவான ஆடவர்கள் பதினைந்திலிருந்து முப்பது வரையான புள்ளிகள் பெறுகிறார்கள். நான்காவதாக அலி ஆடவர்கள் எனப்படுபவர்கள் பூச்சியத்திலிருந்து பதினைந்து வரையிலான புள்ளிகள் பெறுகிறார்கள். அடுத்து நாங்கள் அலி ஆடவர்கள் பற்றி ஆரர்ய்வோம். மனிதனுக்கு நன்மை பயப்பதில் நட்பு முக்கியமானதொன்றாகும். இந்த நட்பில் வள்ளுவர் ஒரு எச்சரிக்கையை முன்வைக்கிறார்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்

நட்பாம் கிழமை தரும்

நட்புக்கிடையில் புணர்ச்சி பழகுதல் எனும் செயலை தொடரவேண்டாம் என வள்ளுவர் கூறுகிறார்.

செயல், பழக்கம், சுபாவம்

ஒருவன் பல நாட்கள் குடித்தல் எனும் செயலைச் செய்து வருகிறான். இக்குடிச் செயல் பற்பல மாதங்களாகி பின் வருடங்களாகவும் தொடரும்போது குடிச்செயல் குடிப் பழக்கமாக மாறுகின்றது. இக்குடிப்பழக்கமும் பற்பல வருடங்களாகத் தொடரும் போது குடியானது குடிப்பவனுடன் இரண்டறக் கலந்துவிடுகிறது. அதாவது குடி அவனது இயல்பாக, சுபாவமாக மாறிப்போய் விடுகிறது. பின்பு அவனது இயற்பெயர் மறைந்து மற்றவர்களால் குடிகாரன் வருகிறான் என அழைக்கப்படுகின்றான். இந்நிலையின் பின் அவன் அக்குடியிலிருந்து தன்னை விடுவிக்க விரும்பி பற்பல முயற்சிகள் செய்தபோதும் குடியானது அவனை விட்டு நீங்கமாட்டாது. எனவே எங்களிடமிருக்கும் பழக்கம் எமக்கும் சமூகத்திற்கும் தீமை தருகின்றது என்பதை பெரியோர்கள் மூலமாகவோ அல்லது நல்ல நூல்களை வாசிப்பதனாலோ அறிய நேர்ந்தால் உடனே எப்பாடுபட்டேனும் நம்மிடமுள்ள தீய பழக்கத்தை முளையிலேயே கிள்ளியெறிந்துவிடல் வேண்டும். ஏனெனில் நாம் பழகும் பழக்கங்கள் எம்மைவிட மிகவும் வலிமை பொருந்தியதாகும்.

இதனாலேயே வள்ளுவர் நட்புக்கு இடையில் புணர்ச்சி எனும் பழக்கத்தை வருடக் கணக்கில் தொடரவேண்டாம் என எச்சரிக்கிறார். ஆண்கள் பதினான்கு, பதினைந்து வயதுகளில் தொடங்கி நட்புக்கிடையில் புணர்ச்சி எனும் செயற்பாட்டை பற்பல வருடங்களாகத் தொடர்ந்தால் அது அவனது சுபாவம் அல்லது இயல்பாகிவிடும். ஆணுடன் புணர்ச்சி ஒரு ஆடவனுக்கு சுபாவமாகிவிடும் பட்சத்தில் எதிர்பாலியலான பெண் சம்பந்தப்பட்ட கவர்ச்சி குறைந்து நாளடைவில் அறவே இல்லாதுபோய்விடும் வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படியாகின் ஆண்களுக்காக காத்திருக்கும் பெண்களின் வாழ்க்கைக்கு யார் பொறுப்பு என்பது ஒரு பெரிய சமூகப் பிரச்சனையாகி விடுகிறது.

எனவே நட்புக்கிடையில் புணர்ச்சி என்னும் செயற்பாடானது முடிவில் பெண் இனத்திற்கு எதிரான மிகப் பெரிய கொடுமையும்

பெண்களின் திருமண வாழ்க்கைக்கு கொள்ளிவைக்கும் ஒரு செயலுமாக வடிவம் தாங்குகின்றது. எமது சகோதரிகளினது வாழ்க்கைக்கு நாமே கொள்ளி வைப்பது மானமுள்ள ரோசமுள்ள தமிழனின் பண்பாட்டுச் செயலாகுமா? நண்பர்களுக்கு இடையில் புணர்ச்சி எனும் இச்செயற்பாடு இயற்கைக்கு முழுக்க, முழுக்க விரோதமானது. தர்மத்துக்கு எதிர்மாறானது, அதர்மத்தோடு கூடியது.

எதிர் பாலார்களுக்கிடையில் உள்ள கவர்ச்சியே இயற்கையானது

ஒரு எருது பசுவோடு புணர்ந்து கன்று ஈனுகிறது. ஒரு கடா மறியோடு புணர்ந்து குட்டி ஈனுகிறது. ஒரு காந்தத்தின் தென்முனைவு இன்னொரு காந்தத்தின் வட முனைவைக் கவர்கின்றது. அவ்வாறே வடமுனைவு தென் முனைவைக் கவர்கின்றது. வடமுனைவு வடமுனைவைத் தள்ளும். தென்முனைவு தென்முனைவைத் தள்ளும். ஒத்த முனைகள் ஒன்றையொன்று தன்னும், ஒவ்வாத முனைகள் ஒன்றையொன்று கவரும். ஒரு மூலகத்தின் மிகச் சிறிய துகள் அணுவாகும். அணுவில் இலத்திரன் (–) எதிர்த் துணிக்கை ஆகும். புரோத்தன் (+) நேர்த் துணிக்கை ஆகும். அணுவில் இலத்திரன் புரோத்தனைக் கவர்கிறது, புரோத்தன் இலத்திரனைக் கவர்கிறது. உயிரற்ற ஜடம் மற்றும் உயிருள்ள ஜீவராசிகள் எல்லாம் இயற்கையோடு ஒத்து இணைந்து எதிர் பாலியலைக் கவர்ந்து அவற்றுடன் புணர்ச்சி மேற்கொண்டு இனத்தைப் பெருக்கி வாழ்கின்றன. காமம் இனத்தைப் பெருக்குவதற்காகவே மனிதனிடத்தும் சகல ஜீவராசிகளிடத்தும் இயற்கையால் அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஆணுக்கு பெண்ணிடம் கவர்ச்சி இருக்கும். பெண்ணுக்கு ஆணிடம் கவர்ச்சி இருக்கும். இது இயற்கை. திருமணத்தின் பின் ஆணின் ஐம்புலன்களும் மனமும் உடம்பும் எழுச்சியடைந்து பெண்ணைப் புணர்ந்து ஆண் இன்பமடையும் அதேநேரம் பெண்ணும் சந்தோசப்படுத்தப்பட்டு பூரண திருப்தியடைய வைக்கப்படுகிறாள். இவ்வாறு செய்ய வல்லவனே ஆண்மையுள்ள ஆடவன் எனப்படுவான். இங்கு ஆண் புணர்தல் என்ற செயலுக்கு அதிபதி ஆகிறான். ஆண் புணர்வதற்கு தன் உடம்பையே மேடையாக்கித் தந்து புணரப்படுபவளாகப் பெண் இருக்கிறாள். இது தர்மத்தோடு கூடிய காமமாகும்.

இயற்கைக்கு விரோதமானதும் மனோ வியாதியின் வெளிப்பாடுமான கவர்ச்சி

ஒரு ஆண் இன்னொரு ஆணைப் புணரும் போது புணரும் ஆணின் மனது ஆசை பெருக ஐம்புலன்களும் உடம்பும் எழுச்சியடைந்து இன்னொரு ஆணை நோக்கிச் செலுத்தப்படுகின்றது. பெண்ணைப் புணருதலுக்கு செயற்படுத்த வேண்டிய செயலும் விருப்பமும் இங்கு இன்னொரு ஆணை நோக்கிச் செலுத்தப்படு கின்றது. ஆணை நோக்கி சேர்க்கைக்கு வருகின்ற ஆசையும் செயலும் பெண்ணுக்குரியவை. எனவே இங்கு புணருபவனின் உடம்பு ஆண், செயலும் ஆசையும் பெண்ணுக்குரியவை. எனவே ஆணுடைய உடம்பும் பெண்ணுடைய விருப்ப செயற்பாடுகளும் இங்கு கலந்து நிற்பதால் இச்செயற்பாடுடையவன் ஆணும் பெண்ணும் கலந்தவனாகி அலி எனப்படுகிறான். இனி புணரப்படுபவள் பெண், இங்கு புணரப்படும் இடத்தில் இருப்பவனது உடம்பு ஆண். ஆனால் இவன் தன்னைப் புணரும் ஆணைச் சேர்க்கைக்கு விரும்புகிறான். அத்துடன் இங்கும் புணரப்படும் ஆணின் செயலும் விருப்பமும் பெண்ணுக்குரியது. எனவே இங்கு புணரப்படும் ஆணும் அலி எனப்படும் நிலைக்கு உள்ளாகிறான். ஆகவே புணர்ச்சியில் ஈடுபடும் இரு ஆண்களுமே அலி நிலைக்கு உள்ளாகிறார்கள். மேலும் அலி வாழ்க்கை முறை மனிதனது சகல நற்குணங்களையும் படிப்படியாக அழிப்பதுமல்லாமல் நில்லாது தீய குணங்களையும் வளர்த்து விடுகின்றது.

இவ்வாறு ஆடவன் ஒருவன் பெண்ணோடு வாழாமல் ஆணை விரும்பி ஆணோடு வாழும் அலி வாழ்க்கையை வாழ்வது இயற்கைக்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றது. இதனால் அடிக்கடி இயற்கை சீறிச் சினந்து கடும் கோபம் கொண்டு கொதித்துக் கொந்தளிக்கிறது. இதனால் ஏற்படும் இயற்கை அழிவுகளை தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் அடிக்கடி பார்த்து பரிதாபப் பட்டுக் கொள்கின்றோம்.

கி.மு.1800 ஆண்டளவில் சோதோம் கொமேரா பட்டணங்களில் வாழ்ந்த ஆண் மக்கள் யாவரும் அலி வாழ்க்கை வாழ்ந்தனர். இதனால் இயற்கை கொதித்தெழுந்தது. இப்பட்டணங்களுக்கு அருகில் இருந்த ஒரு பெரிய எரிமலை வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பைச் சீறியடித்து அம்மக்கள் அனைவரையும் அப்பட்டணங்களையும் எரித்துச் சாம்பராக்கியது. இதை விவிலிய வேதமான பைபிள் பதிவுசெய்து வைத்துள்ளது. தற்சமயம் உலகிலுள்ள உண்மையான ஒருசில ஆன்மீகப் பெரியோர்கள், அலி வாழ்க்கையை விட்டு ஆண்கள் திரும்பாவிடில் மூன்றாம் உலக மகா யுத்தமும் அதனால் உலகமெங்கும் நெருப்பு மழை கொட்டி பேரழிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு எமக்கு வெகு அருகாமையில் வந்துகொண்டிருக்கின்றது என எச்சரிக்கின்றனர்.

ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் பொன்மயமான வாழ்க்கை முறையில் ஆண் மகன் பிரமச்சாரிய விரதம் பன்னிரண்டு, பதின்மூன்று வயதிலிருந்து பூண்டு பன்னீராண்டுகளில் அதில் பூரண சித்தி எய்துகிறான். அத்துடன் அவன் பேராண்மை பொருந்தியவனாகவும் தேவலோக வாசி ஒருவன் பூவுலகில் வாழ்வது போன்றும் காணப்படுகின்றான். சகல நற்குணங்களும் பூண்டுள்ள பெண்மகள் ஒருத்தி இவனைத் திருமணம் செய்து கற்புநெறியோடு இல்லறத்தில் இருவரும் இன்பமாக வாழ்கின்றனர். இவர்களது இல்வாழ்க்கையில் ஆடவனுக்கு ஆண்மைக் குறைவு என்ற கதையே இல்லை. பெண்ணைப் பூரணமாகத் திருப்திப்படுத்தி பேராண்மையுடன் வாழ்கின்றான். எந்த வயதிலும் எந்த வேளையிலும் மனைவியின் விருப்பத்தை உணர்ந்து அவளைப் பூரணமாகச் சந்தோசப்படுத்தக் கூடியவனே பேராண்மை படைத்தவனாவான்.

மேற்படி ஆணும் பெண்ணும் செய்த ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் தியாக வேள்வியினால் சிற்றின்பம் என்று சொல்லப்படும் இல்வாழ்க்கை இவர்களுக்கு சிற்றின்பத்தில் பேரின்பமாக அமைகிறது. மேலும் இவர்கள் சகல வாழ்க்கை வளங்களும் பெற்று நோய்நொடிகளற்ற நீண்ட ஆயுளுடன் மனமகிழ்ச்சியாக இன்பமுடன் வாழ்வர்.

குழந்தைச் செல்வங்கள்

இவர்களுக்கு பெறற்கரிய பரிசில்களை ஒன்றன்பின் ஒன்றாக இயற்கை அன்னை வழங்கத் தொடங்குகின்றாள். பொருள் வளம், அருள் வளம் போன்றவை மாத்திரமல்லாது நன்மக்கட் பேறும் கிட்டுகின்றது. அழகான நற்குண நல்லியல்புள்ள நோயற்ற அதிர்ஷ்டமான குழந்தைகளைப் பெறுகின்றார்கள். சகல நற்குணங்களும் பொருந்திய இக்குழந்தைகளே இப்பெற்றோரின் மாபெரும் சொத்துக்களாவர். இக்குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகின்றபோது தமது பெற்றோரைப் பார்த்து பெருமையுடன் நெஞ்சுநிமிர்த்தி இவர் என் தாய், இவர் என் தந்தை என்று பெருமைப்படுவார்கள். இப்பெற்றோர்கள் தம் குழந்தைகள் தன்மானத்துடனும் சுயகௌரவத்துடனும் வாழ வழிவகுத்தவர்களாவர். இக்குழந்தைகளுக்கு யார் என் தந்தை, யார் என் தாய் என்பதில் கடுகளவேனும் குழப்பமில்லை. இக்குழந்தைகள் தம் தாயைப் போற்றி வணங்கி தெய்வ நிலையில் வைத்து மகிழ்வர். எமது தாயை நாம் தெய்வமாக மதிப்பது போல் தற்சமயம் இன்று சிறுமிகள், மாணவிகள் இளம் பெண்களாக உள்ள எல்லாப் பெண்களும் ஒருநாள் தாயாவார்கள். அத்தாய்மார்களது குழந்தைகளும் ஒருநாள் வளர்ந்து எங்களைப்போல் பெரியவர்களானதும் தம் தாயையும் தெய்வ நிலைக்கு உயர்த்தி வணங்க வேண்டும். அதற்காக

இப்பொழுதிலிருந்தே நாம் உலகிலுள்ள எல்லா பெண்களையும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் மதித்து அவர்களை தாய்மார்களாக சகோதரிகளாக, புதல்விகளாக நடத்த மனதில் உறுதிபூண்டு அவ்வாறே அவர்களை மதித்து நடத்தி வருவர்.

எந்த சமுதாயத்தில் பெண்களது உரிமை மதிக்கப்பட்டு அவர்கள் கௌரவப்படுத்தப்படுகிறார்களோ அந்த சமுதாயம் வளர்ந்து உச்ச நிலையை அடையும் என விவேகானந்தர் கூறியுள்ளார். ஆனால்

நட்புக்கிடையில் புணர்ச்சி எனும் வாழ்க்கைக்கு இரட்டை அர்த்தம் கொண்ட பேச்சு தேவைப்படுகிறது. இப்பேச்சை ஆங்கிலத்தில் Double meaning என்பர். இந்த இரட்டை அர்த்தம் கொண்ட சொல்லாடல் மூலமாகவே இவர்கள் தமக்குரிய புணர்ச்சி நண்பர்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இரட்டை அர்த்தமுள்ள பேச்சு அலி வாழ்க்கை முறைக்கு மிக முக்கியமானதாகும். அலி வாழ்க்கையில் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள் இரட்டை அர்த்தப் பேச்சில் புலமைபெற்று விளங்குவர். அத்துடன் இரட்டை அர்த்தம் கொண்ட செயல்களிலும் ஈடுபடுவர். ஆகவே உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுகின்ற இரட்டை அர்த்தப் பேச்சை முழுவதுமாகக் கைவிட்டாலே அலி வாழ்க்கையைக் கைவிடுவது சுலபமாகிவிடும். இதனைதான் இராமலிங்க அடிகளார் "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்" என்கிறார். ஒழுக்கத்தில் இக்குறைபாடு உடைய ஆண்களால் சமூகத்தில் பெண்களுக்கு உரிய கௌரவம் கொடுத்து வாழமுடியாத நிலை அவர்கள் செயல்களில் காணப்படும்.

எனவே நட்புக்கிடையில் புணர்ச்சியிலுள்ள ஆண் சகோதரர்களே இப்போது அலி வாழ்க்கையிலுள்ள தீமைகளைப் புரிந்துகொண்டிருப் பீர்கள் என நம்புகின்றோம். இனிமேலாவது இந்த அலி வாழ்க்கையை நிறுத்தி படிப்படியாக இப்பிரமச்சாரிய விரமிருந்து பேராண்மை படைத்தவர்களாவீர்களாக. ஆண்கள் பெருமளவில் ஆண்மை படைத்தவர்கள் ஆகிவிட்டால் பெண்களைத் திருத்துவது மிகமிகச் சுலபம். பெண்களைக் கற்பு நெறியில் நிறுத்தி ஆண்கள் ஆண்மை நிலையை அடைந்து பொருள் சேர்த்து பெற்றோரின் விருப்பத்துக்கு இணங்க திருமணம் செய்து நல் மக்களைப் பெற்று இனிதே வாழ்வீர்களாக.

நன்றி, வணக்கம்.
சுபம்.

தொடர்புக்கு:
0778442171



உனக்கு மன அமைதி வேண்டுமானால்
மற்றவர்களிடம் குறை காண்பதை
விட்டுவிடு.

– சாரதாதேவியார்

சாம்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை தொ.இல. 077 6915339